<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 71/2020</u>

<u>வழக்கு சாட்சி PW–12</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராஜாராம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கத்தாணுவன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | நாகர்கோவில் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 23rd, 2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது பனங்குடி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 11.11.2017 ம் தேதி, 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று மருத்துவமனையில் காயம்பட்ட சரவணக்குமார் என்பவர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றிருப்பதாக தெரிந்து பின்னர் அங்கு சென்று பார்த்தபோது, அவர் மேல்சிகிச்சைக்காக நாகர்கோவில் சுஸ்ருசா தனியார் மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக கூறியதால் 12.11.2017 அன்று அதிகாலை 02.00 மணிக்கு அங்கு சிகிச்சையில் இருந்த சரவணக்குமார் என்பவரை விசாரித்தும், அவர் சொல்ல சொல்ல அவர் உறவினர் எழுதிய புகார் மனுவைப் என்னிடம் கொடுத்தார். பின்னர் 10.30 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய

குற்றஎண்.192/2017, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 324, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை புளியங்குடி காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சொக்கம்பட்டி காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு ஒரு போலீஸ் தினமும் வருவார் என்றால் சரிதான். சொக்கம்பட்டி காவல்நிலையத்திற்கும், தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். ஆய்வாளர் என்னை அன்றைய தினம் விசாரித்தார். நான் சொல்ல சொல்ல ஆய்வாளர் என்னுடைய விசாரணை வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த புகார் மனுவில் டிராக்டர் டிரைலரின் பதிவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் இருசக்கரவாகனத்தின் பதிவெண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டிராக்டர் ஓட்டுநராக கருப்பசாமி மகன் கண்ணனை அனுப்பி வைத்ததாக புகார் மனுவில் கூறவில்லை. புகார் மனுவில் அறிவேன் சாட்சியாக யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கைத காலதாமதத்துடன் நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரியல்ல. வாதியால் எதற்காக காலம் தாழ்த்தி புகார் கொடுத்தார் என்று குறிப்பிட்டு முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சி கண்ணன் என்பவர் எதிரிகளுக்கு பாத்தியப்பட்ட செங்கல் சூலை அருகே குப்பைகளை கொட்டி சுகாதார கேடு ஏற்படுத்தினார்கள் என்றாலும், எதிரி தற்செயலாக கேள்விபட்டு தென்காசி –மதுரை ரோட்டில் செங்கல்சூலை செல்லும்

பாதையில் வைத்து சாட்சி கண்ணனிடம் எங்கள் இடத்தில் எப்படி குப்பை கொட்டலாம் என்று கேட்டார்கள் என்றாலும், சாட்சி கண்ணன் என்பவர் பொது இடத்தில் வைத்து பெண் என்றும் பாராமல் அசிங்கமாக பேசி அவமானமாக பேசினார்கள் என்றாலும், பின்னர் எதிரி 2 தனது கணவரிடம் சொல்லி சாட்சி கண்ணன் மீது புகார் கொடுத்து விடுவார்களோ என்று நினைத்து பின்யோசனை செய்து அ.சா.1ம், சாட்சி கண்ணனும் சேர்ந்து திட்டமிட்டு அசா.1 பைக்கில் இருந்து கீழே விழுந்த காயத்தை வைத்து எதிரிகள் மீது பின்யோசனை செய்து பொய்யாக புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. எழுதாத வெள்ளைப் பேப்பரில் கைரேகை வாங்கிக்கொண்டு பிற்பாடாக முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக புகார் மனு வரப்பெற்றது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி திருநெல்வேலி முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru.Arichandran,Assistant Programmer , முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.28 16:34:13 +0530